

எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களின் கைதைக் கண்டித்து தேனி வடக்கு மாவட்டத்தில் முன்னாள் முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் எம்.எல்.ஏ. தலைமையில் கழகத்தினர் கலந்துகொண்டு தவெக அரசைக் கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.



திண்டுக்கல்லில் பேருந்து நிலையத்தில் தி.மு.க. துணை பொதுச் செயலாளர் இ.பெரியசாமி தலைமையில், கிழக்கு மாவட்டச் செயலாளர் இ.பெ.செந்தில்குமார் எம்.எல்.ஏ., முன்னாள் வேடசந்தூர் சட்டமன்ற உறுப்பினர் காந்திராஜன், துணை செயலாளர் நாகராஜன், மாநகரச் செயலாளர் ராஜப்பா, மேயர் இளமதி ஜோதி பிரகாஷ், கழக நிர்வாகிகள் தொண்டர்கள் மறியல் செய்தனர்.

### பழிவாங்கும் போக்கு என்பது ஜனநாயக விரோதமே!

# எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினை கைது செய்திருப்பது கண்டிக்கத்தக்கது!

## திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அறிக்கை!

**சென்னை, ஆக. 5 - தமிழ்நாடு அரசு எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை எந்த வித முகாந்திரமுமின்றி, திடீர் என்று கைது செய்திருப்பது கண்டனத்திற்குரியது - ஜனநாயக விரோதமானது என்று திராவிடர் கழகத் தலைவர் ஆசிரியர் கி.வீரமணி அவர்கள் விடுத்துள்ள அறிக்கை வருமாறு: -**

தஞ்சையில் நேற்று (3.8.2026) நடைபெற்ற ஆர்ப்பாட்டத்தில் ஆட்சேபகரமாகப் பேசியதாகக் கூறி, தமிழ்நாடு சட்டப்பேரவை எதிர்க்கட்சித் தலைவரும், தி.மு.க. இளைஞரணிச் செயலாளருமான உதயநிதி ஸ்டாலின் கைது செய்யப்பட்டிருப்பது கண்டனத்திற்குரியதாகும். இன்று (4.8.2026) மதியம் 12 மணி வரை கைது நடவடிக்கையை நிறுத்தி வைக்குமாறு நீதிமன்றம் அறிவுறுத்தியும் கூட, காவல்துறையினர் “அதிவிரைவாகக்” கைது செய்திருப்பதாக ஊடகங்கள் தெரிவிக்கின்றன. அவ்வளவு அவசரமாகக் கைது செய்ய வேண்டிய அவ



சியம் என்ன? அவதூறுப் பேச்சு என்று கருதினால், அதற்கு உரிய சட்ட முறையில் வழக்குத் தொடுத்து, விசாரணை நடத்தி, பிறகு உரிய சட்ட நடவடிக்கைகளை எடுப்பதுதானே முறையானது!

அதுவும், நாளை (5.8.2026) தமிழ்நாடு சட்டப்பேரவையில் பட்ஜெட் தாக்கல் செய்யப்படவுள்ள நிலையில், எதிர்க்கட்சித் தலைவரை எப்படியாவது அதில் பங்கேற்கச் செய்யவிடக் கூடாது என்ற அவசரமே இதற்குக் காரணமா என்ற சந்தேகம்தான் பரவலாக எழுகிறது.

அரசியல் பழிவாங்கும் நடவடிக்கைகளை ஒருபோதும் ஏற்க முடியாது. ஆனால், எதிர்ப்பையோ, பொதுவானவர்களின் கருத்தையோ கொஞ்சமும் கருத்தில் கொள்ளாமல், பழிவாங்கும் நடவடிக்கையைத் தொடர்ந்து செயல்படுத்திவரும் தமிழ்நாடு அரசின் போக்கு கண்டனத்திற்குரியது; இந்தப் போக்கு ஒருபோதும் ஜனநாயக ஆட்சியின் அம்சமும் ஆகாது.

இத்தகைய போக்குகள் எதிர்வினையைத்தான் ஏற்படுத்தும் என்பதில் அய்யமில்லை.

இவ்வாறு திராவிடர் கழகத் தலைவர் கி.வீரமணி அவர்கள் அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

### எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் கைது

# நீதிமன்றம் அறிவுறுத்திய பின்னரும் கைது நடவடிக்கையா?

## எம்.எச்.ஜவாஹிருல்லா எம்.எல்.ஏ. அறிக்கை!

சென்னை, ஆக. 5 - மனிதநேய மக்கள் கட்சித் தலைவர் பேராசிரியர் ஜவாஹிருல்லா வெளியிட்டுள்ள அறிக்கையில், எதிர்க்கட்சித் தலைவர் மீது அவசர அவரமாக வழக்குப்பதிவு செய்து, அவரை கைது செய்திருப்பது கடும் கண்டனத்



திற்குரியது என தெரிவித்துள்ளார்.

நீதிமன்றத்தின் நடவடிக்கையைப் பொருட்படுத்தாமல் மேற்கொள்ளப்பட்ட இத்தகைய கைது நடவடிக்கை நீதிமன்ற அவ மதிப்பு உள்ளிட்ட சட்டரீதியான கேள்விகளை எழுப்புவதாகவும் சுட்டிக்காட்டியுள்ளார்.

### தமிழ்நாடு சட்டமன்ற எதிர்க்கட்சித் தலைவர்

# உதயநிதி ஸ்டாலின் கைது - ஜனநாயக விரோதமானது!

## பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. கண்டனம்!

சென்னை, ஆக. 5 - தே.மு.தி.க. தலைவர் பிரேமலதா விஜயகாந்த் எம்.எல்.ஏ. விடுத்துள்ள அறிக்கை வருமாறு:

கருத்து வேறுபாடுகளை வெளிப்படுத்துவது அடிப்படை ஜனநாயக உரிமை, கருத்துக்கு கருத்தால் பதிலளிப்பதே ஜனநாயகத்தின் மாண்பு, கைது நடவடிக்கையே தீர்வாக கருதுவது ஜனநாயக மரபுகளுக்கு ஏற்றதல்ல என கண்டனம் தெரிவித்துள்ளார்.

எதிர்க்கட்சியினருக்கு அரசியல் கருத்துகளை ஜனநாயக முறையில் தெரிவிக்கும் உரிமை உள்ளது, அந்த உரிமையை குறைக்கும் வகையில் கைது நடவடிக்கைகளை மேற்கொள்வது ஏற்றுக்கொள்ள முடியாதது என த.வெ.க. அரசை விமர்சித்துள்ளார்.

சட்டப்பேரவை பட்ஜெட் கூட்டத்தொடர் தொடங்க உள்ள முக்கியமான நேரத்தில், பொதுக்கூட்டத்தில் கருத்து தெரிவித்ததாக கூறி எதிர்க்கட்சி தலைவரை கைது செய்தது ஜனநாயக



உணர்வுக்கும், அரசியல் நாகரிகத்திற்கும் பொருந்தாத செயல் என தவகெ அரசின் செயலுக்கு கடும் கண்டனம் தெரிவித்துள்ளார்.

இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.

### எதிர்க்கட்சித் தலைவர்

# உதயநிதி ஸ்டாலின் கைது உள்நோக்கம் கொண்டது!

## தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏ. கண்டனம்!

சென்னை, ஆக. 5 - எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினை கைது செய்திருப்பது, தவெக அரசின் உள்நோக்கம் கொண்ட நடவடிக்கை என மனிதநேய ஜனநாயகக் கட்சித் தலைவர் தமிமுன் அன்சாரி எம்.எல்.ஏ. கண்டனம் தெரிவித்துள்ளார்.

அவர் விடுத்துள்ள அறிக்கையில், சட்டப் பேரவை நாளை கூடவிருக்கும் சூழலில், எதிர்க் கட்சித் தலைவர் கைது செய்யப்பட்டிருப்பது, த.வெ.க. அரசின் உள்நோக்கத்தை வெளிக்காட்டுவதாக குறிப்



பிட்டுள்ளார். தமிழ்நாடு அரசு இந்த விவகாரத்தில் வரம்பு மீறியிருப்பதாகவும் அவர் குற்றம்சாட்டியுள்ளார்.

# கைதின் பின்னணியில் இருப்பது அரசியல் மட்டும்தான்!

## பா.ம.க. தலைவர் அன்புமணி கண்டனம்!

சென்னை, ஆக. 5 - எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலினை, இவ்வளவு அவசரமாக கைது செய்ய வேண்டிய தேவை இல்லை என்றும், நண்பகல் 12 மணி வரை, அவரை கைது செய்வதைத் தவிர்க்கும்படி உயர் நீதிமன்றமே அறிவுறுத்திய பிறகும் அவர் கைது செய்யப்பட்டுள்ளதாக பா.ம.க. தலைவர் அன்புமணி தெரிவித்துள்ளார்.

தமிழகத்தின் தலையாய பிரச்சினைகளில் கூட காட்டப்படாத அவசரத்தை, இந்த கைது



நடவடிக்கையில் அரசும், காவல் துறையும் காட்டியதன் பின்னணியில் இருப்பது அரசியல் மட்டும் தான் என்றும் அவர் கூறியுள்ளார்.

### எதிர்க்கட்சித் தலைவர்

# உதயநிதி ஸ்டாலின் கைது கண்டிக்கத்தக்கது!

## புதிய தமிழகம் கட்சித் தலைவர் க.கிருஷ்ணசாமி அறிக்கை!

சென்னை, ஆக. 5 - டெல்டா மாவட்டங்களின் வாழ்வாதாரமாக விளங்கும் காவிரி விவகாரம் குறித்து 03.08.2026 அன்று தி.மு.க. சார்பில் தஞ்சையில் நடைபெற்ற கூட்டத்தில் ’ஆட்சேபகரமான’ முறையில் பேசியதாக, த.வெ.க சார்பில் கொடுக்கப்பட்ட புகாரின் அடிப்படையில், எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்பட்டது வன்மையாகக் கண்டிக்கத்தக்கது.

நேரடியாக அவர் எந்தவொரு தனிநபரின் பெயரையும் குறிப்பிட்டுப் பேசாத பொழுது, மறைமுகப் பொருள் கொண்டு உதயநிதி அவர்கள் மீது வழக்குப்



பதிவு செய்வதோ, கைது செய்வதோ ஏற்புடையதல்ல. எதிர்க்கட்சித் தலைவர்கள் மேடைகளில் பேசக்கூடிய பேச்சுக்களுக் கெல்லாம் வரிக்கு வரி பொருள் கண்டு உள்நோக்கம் கற்பிக்க ஆரம்பித்தால், தினமும் நூற்றுக்கணக்கான வழக்குகளைப் பதிவு செய்து கொண்டே இருக்க நேரிடும்.

மேலும், நாளை (இன்று) பட்ஜெட் கூட்டம் தொடங்கவுள்ள நிலையில் எதிர்க்கட்சித் தலைவரைக் கைது செய்து சிறையிலடைக்க முயல்வது ஜனநாயக மாண்பு களைச் சிதைக்கும் நடவடிக்கையாகவே கருதப்படும்!

எனவே, உதயநிதி ஸ்டாலின் அவர்களை உடனடியாக விடுதலை செய்ய வேண்டும் என புதிய தமிழகம் கட்சியின் சார்பில் வலியுறுத்துகிறேன்.

இவ்வாறு டாக்டர் க.கிருஷ்ணசாமி விடுத்துள்ள அறிக்கையில் கூறியுள்ளார்.

### கரூர் கொடுந்துயரச் சம்பவம்:

# நக்கீரன் கோபால் மீது வழக்குப்பதிவு!

சென்னை, ஆக. 5 - கரூர் நெரிசல் சம்பவம் குறித்த யூடியூப் கருத்துகளுக்காக நக்கீரன் கோபால் மீது சைபர் கிரைம் பிரிவு வழக்குப் பதிவு செய்துள்ளது.

யூடியூப் சேனல் ஒன்றில் நடைபெற்ற விவாதத்தின் போது பொது



அமைதிக்குக் குந்தகம் விளைவிக்கும் வகையில் கருத்துகளைத் தெரிவித்ததாகக் கூறப்பட்ட புகாரின் பேரில் ‘நக்கீரன்’ இதழ் ஆசிரியர் ஆர்.கோபால் மீது சென்னை பெருநகர சைபர் கிரைம் பிரிவு நேற்று முன்தினம் வழக்குப்பதிவு செய்துள்ளனர்.



இராணிப்பேட்டை மாவட்டம் இராணிப்பேட்டை நகரம் முத்துக்கடையில் எதிர்க்கட்சித் தலைவர் – கழக இளைஞரணிச் செயலாளர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை கைது செய்த அராஜக த.வெ.க. அரசை கண்டித்து இராணிப்பேட்டை மாவட்ட செயலாளர் முன்னாள் அமைச்சர் ஆர.காந்தி தலைமையில் சாலை மறியல் செய்தார். இதில் மாநில சூற்றுச்சூழல் அணி துணைச் செயலாளர் ஆர்.வினோத் காந்தி, ஜி.கே.குழுமம் சந்தோஷ்காந்தி மற்றும் மாவட்ட துணைச் செயலாளர் குமுதாகுமார் மற்றும் நகர கழக நிர்வாகிகள், மாவட்ட அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் அனைத்து அணிகளின் அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள் மற்றும் கழகத்தினர் உடனிருந்தனர்.



எதிர்க்கட்சித் தலைவர் உதயநிதிஸ்டாலின் அவர்கள் கைது செய்யப்பட்டதை கண்டித்து திருவண்ணாமலை, பெரியார் சிலை அருகில், கழக மருத்துவ அணி துணைத் தலைவர் டாக்டர் எ.வ.வே.கம்பன் தலைமையில் மறியலில் ஈடுபட்டு கைதாகினர். உடன் இரா.ஸ்ரீதரன், ப.கார்த்திவேல்மாறன், பிரியா விஜயரங்கன், க.சௌந்தரராசன், சு.ராஜாங்கம், ஏ.ஏ.ஆறுமுகம், எஸ்.கண்ணதாசன், இல.குணசேகரன், மண்டி.பிரகாஷ் உட்பட பலர் கைது செய்யப்பட்டனர்.